மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ம் நாள் சனிக்கிழமை

இ.மஎண்.05/2024
உள்
அசல் வழக்கு எண்.64/2022
--------

சே.சண்முக வடிவம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. செ.சண்முகராஜ்
2. ச.சுவர்ணாம்பிகை
3. கே.வீரசின்னம்மாள்
4. கே.ஜெகன்நாத பெருமாள்
5. வட்டாட்சியர், சாத்தூர்
6. மாவட்ட ஆட்சியர்
   விருதுநகர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

7. சுப்பையா (எ) முத்துராஜ்
8. நாச்சியார்
9. அழகரக்கம்மாள்
10. சாந்தி
11. வசுமதி
12. செந்தில்நாதன்
13. முருகராஜ்
14. மகாலிங்கம் ... எதிர்மனுதாரர்கள்/3 ம் நபர்கள்/ பிரதிவாதிகள்

இந்த மனு 01.03.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 01.04.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ஏ.விஸ்வநாத் அவர்கள் ஆஜராகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு

எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா வழக்கை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 28.02.2024ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

கடந்த 07.06.2021ம் தேதியன்று இறந்துபோன வாதியின் சகோதரியான சுப்புத்தாய்க்கு வாதி மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசு என்று விளம்புகை செய்யவும் மற்றும் 5ம் பிரதிவாதியான வட்டாட்சியர் வாதி, காலமான சுப்புத்தாய்க்கு வாரிசு என வாரிசு சான்றிதழ் வழங்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், மற்ற இதர பரிகாரங்களுக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 07.06.2021ம் தேதியன்று இறந்துபோன வாதியின் சகோதரியான சுப்புத்தாய்க்கு நேரடியான வழக்கில் உள்ள 1 முதல் 4ம் பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/3ம் நபர்கள் ஆகியோர்கள் 2ம் நிலை வாரிசுகளாவார் என்றும், அவர்கள் வழக்கில் சேர்க்கப்படாமல் உள்ளதால் மேற்படி எதிர்மனுதாரர்கள்/3ம் நபர் வழக்கில் அவசியமான கட்சிக்காரர்களாவார் என்றும், அவர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/3ம் நபர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது இ.ம.எண்.04/2023 என நம்பராகி நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவின் அடிப்படையில் மேற்படி 7 முதல் 14ம் எதிர்மனுதாரர்கள்/3ம் நபர்களை தாவா வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படுவதாய் உள்ளது. எனவே, தாவா வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-**

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுவில் வியக்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர ஏனையவற்றை மனுதாரர்/வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி சீர்திருத்த மனுவில் கண்ட 7 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை முதன்மை வழக்கில் சேர்க்க 1 முதல் 4 வரையான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) **5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்**:-

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அசல் வழக்கானது 07.06.2021ம் தேதி இறந்துபோன வாதியின் சகோதரி சுப்புத்தாய்க்கு வாதி மட்டுமே வாரிசு என்ற விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் கண்ட இறந்துபோன சுப்புத்தாய் என்பவருக்கான 2ம் நிலை வாரிசுகளான நபர்களை கட்சியாக சேர்க்காமல் வாரிசுகளை மறைத்து தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் நீதிமன்றத்தில் சுத்த கையுடன் அணுகவில்லை என்பது தெரிகிறது. அதனால் மனுதாரர் தாக்கல் செய்தள்ள தாவா மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

8) **<u>தீர்வு</u>**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா வழக்கை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 28.02.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரர் கோரியுள்ள பரிகாரத்தை வழங்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். பொதுவாக ஒரு வழக்கைப் பொறுத்து அவசிய தரப்பினரை கட்சியாக சேர்த்து வழக்கு பற்றிய முழு விபரங்களின் அடிப்படையில் மட்டுமே வழக்கை மேல்நடத்த முடியும் என்றாலும், அவ்வாறு இல்லாத சேர்க்காதபட்சத்தில் இந்த வழக்கில் சரியான தீர்ப்பினை எட்ட முடியாமல் போய்விடும். மேலும், இந்த வழக்கு சம்பந்தமாக வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. இந்த வழக்கைப் பொறுத்து ஏற்கனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இ.ம.எண்.04/2023 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள், இ.ம.எண்.04/2023 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தாவா வழக்கை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 28.02.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.